**<u>Sub Court, Eraniel</u>**

**O.S. No.88/2022**

**Date:** 13.10.2025.

வா.சா.1 - திரு. விஜயகுமார்

சாட்சி சத்தியபிரமாணத்தின் பேரில் விசாரிக்கப்பட்டார்.

<u>1 ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

நான் Diploma Electrical Engineering படித்திருக்கிறேன். நான் இந்து அறநிலைய துறையில் 2005 முதல் சென்னை திருவொற்றியூரில் பணியாற்றுகிறேன். எனது மனைவி சென்னையில் பல்லாவரத்தில் உள்ள தனியார் கல்லூரியில் பணியில் இருக்கிறார். நாங்கள் சுமார் 20 ஆண்டுகளாக சென்னையில் குடிவசிக்கிறோம். நான் தாக்கல் செய்துள்ள வழக்கு பட்டிகை 4 அயிட்ட சொத்துகளின் எல்கைகளை என்னால் சொல்லஇயலாது. முதல் விசாரணை வாக்குமூலத்தினை நான் படித்து பார்த்து தான் கையொப்பம் செய்தேன். அதில் 2ம் பக்கத்தில் முதல் பத்தியின் கடைசி மூன்று வரிகளில் உள்ள விபரம் சரியா என்றால், செல்லம்மாள் , நாகபெருமாள் இறப்பதற்கு 15 ஆண்டுகளுக்கு முன்னர் இறந்துவிட்டார் என்று குறிப்பிட்டிருப்பது சரியல்ல, 15 ஆண்டுகளுக்கு பின்னர் இறந்தார். நான் எனது பெற்றோருக்கு ஒரே மகன். எனக்கு வருக்க தட்டு என்ற இடத்தில் வீடும், சொத்துகளும் உள்ளன என்றால், சரிதான். நான் 1ம் பிரதிவாதியையும், அவருடைய மனைவியையும் பாராமரிப்பதாக குறிப்பிட்டுள்ள நிலையில் அதற்கு ஆதரவாக ஆவணங்கள் என்னால் தாக்கல் செய்ய இயலாது. சமீபத்தில் அவர்கள் மருத்துவ சிகிட்சை எடுத்த விபரம் எனக்கு தெரியாது. நான் எனது முதல் விசாரணை வாக்குமூலத்தில் நான் அவர்களை பராமரித்து வருவதாக கூறியிருப்பது தவறு என்றால், சரியல்ல. வழக்கு பட்டிகை சொத்து நாகபெருமாளுக்கும், அவருடைய மனைவி செல்லம்மாளுக்கும் கூட்டாக

பாத்தியப்பட்டது என்பதை காட்டுவதற்கு ஆவணங்கள் தாக்கல் செய்திருக்கிறேனா என்ற விபரம் எனக்கு நினைவில் இல்லை. அவ்வாறு ஆவணங்கள் தாக்கல் செய்யலாம். எனது வழக்குரையில் காண்பித்துள்ள நாகபெருமாளின் காலத்திற்கு பிறகு அவரின் மனைவி மற்றும் மகன்கள் மற்றும் மகளுக்கு பாத்தியப்பட்டதாக கூறுவதற்கு ஆதரவாக வாரிசு சான்றிதழ் தாக்கல் செய்ய இயலாது. நாகபெருமாள் நாடாருக்கு செல்லப்பன் என்ற மகன் கிடையாது என்றாலும், நாகபெருமாளுக்கு ஸ்ரீகிருஷ்ண பெருமாள் நாடார் என்ற மகன் தான் உண்டு என்றாலும், எனக்கு நினைவு தெரிந்த வகையில் அவருக்கு செல்லப்பன் என்ற மகன் உண்டு. நாகபெருமாள் மகன் செல்லப்பன் என்பதை காட்டுவதற்கு ஆவணங்கள் தாக்கல் செய்ய முடியுமா என்றால், சாட்சி 40 வருடங்களுக்கு முன்பு இறந்துபோன அவரின் பெயர் ஸ்ரீகிருஷ்ணபெருமாள் நாடாராக கூட இருக்கலாம், எனக்கு தெரியவில்லை என்று கூறுகிறார். எனக்கு 1ம் பிரதிவாதியின் குடும்பத்துடன் , அவர்களின் சொத்துகளுடனும் எந்த தொடர்பும் கிடையாது என்றாலும், அதனால் தான் உண்மை விபரங்கள் எனக்கு தெரியவில்லை என்றாலும், சரியல்ல. நான் வழக்குரையில் குறிப்பிட்டுள்ள குடும்ப அட்டவணை தவறு என்றால், 40 வருடங்கள் ஆகிய நிலையில் எனக்கு விபரங்கள் சரியாக நினைவில் இல்லை. ஸ்ரீகிருஷ்ண பெருமாள், பாலகிருஷ்ணனுக்கு மூத்தவர் . தங்கம்மாள் எந்த வருடம் , மாதம் தேதியில் பிறந்தார் என்ற விபரம் எனக்கு தெரியாது. அவருக்கு எந்த தேதி வருடத்தில் திருமணம் நடந்தது என்ற விபரம் எனக்கு தெரியாது. நாகபெருமாள் நாடார் 1956 க்கு முன்னர் அல்லது பின்னர் இறந்தாரா என்பது பற்றிய ஆவணங்கள் நான் தாக்கல் செய்யவில்லை என்றால்,

சரிதான். நாகபெருமாள் நாடாருக்கு வழக்கு பட்டிகை சொத்து எவ்வாறு கிடைத்தது என்ற விபரங்கள் பற்றிய ஆவணங்களை நான் தாக்கல் செய்யவில்லை என்றால், சரிதான். நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ–1 ஆவணம் 08.12.2003 ல் செல்லம்மாளும், பாலகிருஷ்ணனும் பாகபிரிவினை செய்துகொண்டார்கள் என்றால், அவர்கள் தன்னிசையாக அவர்களின் தாயார் உயிருடன் இருக்கும்போது அவ்வாறு எழுதிக்கொண்டார்கள். அதுவிபரம் எனக்கு தற்போது தான் தெரியவந்தது. எனது தாயார் 24.08.2019 ல் அன்று இறந்துவிட்டார். அவர் உயிருடன் இருந்த 16 வருடங்களில் அந்த பாகபிரிவினை பத்திரம் தன்னை கட்டுபடுத்தாது என்று , எந்த நடிவடிக்கையும் எடுக்கவில்லை என்றால், சரிதான். வா.சா.ஆ–1 ஆவணம் பதிவு செய்த தேதிமுதல், நடைமுறைக்கு வந்து 1ம் பிரதிவாதி வழக்கு பட்டிகை சொத்தினை அவர் பெயரில் பெயர் மாற்றம் செய்து அனுபவித்து வருகிறார் என்றால், சரியல்ல. வா.சா.ஆ–1 ஆவணம் 2004 ற்கு முன்பே எழுதப்பட்டுவிட்டதால் எனது தாயாருக்கு வழக்கு பட்டிகை சொத்தில் எந்த உரிமையும் கிடையாது என்றால், சரியல்ல. இந்து வாரிசுரிமை சட்டம் 2005 ன் படி எனது தாயாருக்கு வழக்கு பட்டிகை சொத்தில் உரிமையில்லை என்றால், சரியல்ல. எனது தாயாரின் திருமணம் 1976 ல் நடைபெற்றது. 1989 ம் ஆண்டிற்கு முன்பே எனது தாயாருக்கு திருமணம் நடந்துவிட்டதால் இந்து வாரிசுரிமை தமிழ்நாடு திருத்த சட்டத்தின் படி அவர் உரிமைகோரமுடியாது என்றால், சரியல்ல. எனக்கு செல்லதுரை மகன் விஷ்ணுகுமார் எனது மைத்துனர் உறவு முறை. அவர் 1ம் பிரதிவாதியிடம் 27.01.2022 ல் ஆவணம்

எண்.190/2022 ன் மூலம் கிரைய வாங்கியிருப்பதாக எதிர்வழக்கரையில் குறிப்பிட்டிருக்கிறார் என்றால் , அதுவிபரம் எனக்கு நினைவில் இல்லை. அதுபற்றி நான் விசாரித்து பார்க்கவில்லை.

குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி படித்து பார்த்து சரியென ஒப்புக்கொண்டு என் முன்னிலையில் கையெழுத்துச் செய்தார்.

சார்பு நீதிபதி,
இரணியல்.